செய்தி வெளியீடு எண் :03 நாள் :02.04.2018

## *தேனி மாவட்டம்*
## *வெப்ப அலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது:-*

**********

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வெப்ப அலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் இன்று (02.04.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள தினசரி அதிக அளவில் தண்ணீர் அருந்தவும். மேலும், இளநீர், மோர் மற்றும் பழரசங்கள் அருந்துவதால் உடல் வெப்பத்தினை தணித்திட முடியும். கோடைக் காலத்தில் எண்ணெயில் பொரித்த உணவுகள், மசாலா மற்றும் காரம் அதிகம் உள்ள உணவுகளை தவிர்த்திட வேண்டும். நேரடியாக நண்பகல் 12.00 மணி முதல் 3.00 வரை வெயிலில் செல்வதை முடிந்தவரை தவிர்த்திட வேண்டும். இயலாத சமயங்களில் குடை அல்லது தலை மறைக்கும் துணியினை பயன்படுத்திட வேண்டும். அதிக நேரம் வெயிலில் இருப்பதை தவிர்த்திட வேண்டும்.

கடுமையான வெயிலில் செல்லும்போது வியர்வை அதிகம் வெளியேறுவதால் உப்பு சர்க்கரை கரைசல் கலந்த நீரை பருகிட வேண்டும். வெயிலில் செல்லும்போது தலைசுற்றல் மயக்கம் ஏற்படின் உடனடியாக நிழலில் ஓய்வெடுக்க வேண்டும். வழக்கமாக பருகும் தண்ணீரின் அளவைவிட கூடுதலாக தண்ணீர் அருந்திட வேண்டும். அதன்பின்னரும் உடல்நலக்குறைவு ஏற்படின் அருகாமையில் உள்ள அரசு மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை அணுகிட வேண்டும். அடிக்கடி நல்ல தண்ணீரால் முகத்தினை கழுவுதல் வேண்டும். மேலும், ஒருநாளைக்கு இரண்டு முறை குளிப்பதினால் வியர்வை துவாரங்கள் திறக்கப்படுவதோடு தோலில் படியும் அழுக்குகளும் குறையும். கோடைக் காலத்தில் பருத்தி ஆடைகளை அணிதல் உகந்தது. இறுக்கமாக ஆடை அணிவதையும், குழந்தைகள் வெயில் நேரத்தில் திறந்த வெளியில் விளையாடுவதையும், தெருக்களில் விற்றுவரும் ஐஸ் போன்ற உணவு பொருள்களை உண்பதை தவிர்த்திட வேண்டும்.

சின்னம்மை, தட்டம்மை நோய்களுக்கான அறிகுறி தென்படின், அரசு மருத்துவமனைகளை அணுகிட வேண்டும். அம்மை நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதை தவிர்த்திட வேண்டும். நோய் பாதிக்கப்பட்டவரை, நோயிலிருந்து விடுபடும் வரையில் தனிமையில் இருக்க வைத்திட வேண்டும். தெருவோரங்களில் ஈ மற்றும் தூசிபடிந்த நிலையிலும், தோலுரித்த, வெட்டி விற்பனை செய்யப்படும் பழங்கள் மற்றும் உணவு பொருட்களை உண்ணுவதையும், தெருக்களில் விற்று வரும் குளிர்பானங்கள் மற்றும் ஐஸ் போன்ற பொருட்களை உண்பதையும் தவிர்த்திட வேண்டும். அனைவரும், வெளியில் செல்லும்போது காலணிகள் அணிந்து செல்ல வேண்டும். மேற்கூறிய வழிமுறைகளை பின்பற்றி வெயிலின் தாக்கத்திலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். மேலும், வெயிலின் தாக்கம் குறித்து பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்திட துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.வடிவேல் அவர்கள், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.விஜயகுமாரன் அவர்கள், தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவ மனை முதல்வர் மரு.திருநாவுக்கரசு அவர்கள், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி வசந்தி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சந்திரசேகரன் அவர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி அபிதாஹனீப் அவர்கள், அனைத்து நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**